மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.13/2024
அ.வ.எண்.395/2012

பழனியப்பன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1.வையாபுரி
2.பெரமகவுண்டர்
3. மைலி (எ) மயில்
4. அம்மாசி (இறந்தவர்)
5. சின்னபொண்ணு
6. துரைசாமி (இறந்தவர்)
7. சின்னதம்பி
8. மகாலிங்கம்
9. பிரேமலதா
10. ஜெகதீசன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 16.10.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.R.குருசாமி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4, 6 எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 5, 9, 10 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், 7, 8ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.ஈஸ்வரன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் உத்தேச திருத்தப்பாட்டில் கண்டுள்ள திருத்தங்களை வழக்குரையில் மேற்கொள்ள மனுதாரரை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்/வாதியால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகப்பிரிவினை, சுவாதீனப்பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு புதிதாக எழுவினாக்கள் வனைந்த பிறகு விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலைகளில் தற்போது உத்தேச திருத்தப்பாடுகளை மேற்கொள்ள வேண்டி மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது. இம்மனுவில் கோரப்பட்ட திருத்தங்கள் ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட வழக்கை எந்த விதத்திலும் திருத்துவதாக அமையாது. உண்மையில் நடந்த சம்பவங்களை விளக்கவும், வழக்குரையில் பரிகாரங்களுக்குரிய சரியான சொத்துவிவரத்தை சேர்க்கவும் வேண்டி தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) இம்மனுவில் கோரப்பட்ட உத்தேச திருத்தப்பாடுகள் வழக்குரையின் அடிப்படையை எந்த விதத்திலும் மாற்றுவதாகவோ, சிதைப்பதாகவோ, புதிதான சங்கதிகளை புகுத்துவதாகவோ இல்லை. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்தரப்பினருக்கு எந்த இழப்பும் ஏற்படப்போவதில்லை. இம்மனுவை அனுமதிப்பதால் இவ்வழக்கில் ஒரு முழுமையான முடிவை எட்ட வழிவகுக்கும். எனவே உத்தேச திருத்தப்பாட்டில் கண்டுள்ள திருத்தங்களை வழக்குரையில் மேற்கொள்ள மனுதாரரை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(இந்த எதிருரை இம்மனுவின் 7, 8 எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

(i) இம்மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கை திறக்க கோரும் மனுவிற்கு எவ்வித காரணமும் கூறாமலும், திருத்தப்பாடு கோரும் மனுவில் கூறப்பட்டுள்ள உத்தேச திருத்தப்பாட்டு விவரத்தில் கோரியுள்ள திருத்தங்கள்

எவையும் எவ்விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல. இம்மனுவை அனுமதித்தால் மேற்படி வழக்கின் அடிப்படையும், வழக்குமூலமும் மாற்றப்பட்டுவிடும். 4 ம் பிரதிவாதி குறித்தான திருத்தப்பாடு இத்தகைய சூழ்நிலையில் எவ்விதத்திலும் அனுமதிக்கத்தக்கதல்ல. 4 ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்ய சுமார் 40 நாட்களுக்கு முன்பே இறந்துவிட்ட நிலையில், கடந்த 01.11.2016 ம் தேதியில் மனுதாரரால் இ.ம.எண்.977/2016 என்ற திருத்தப்பாடு கோரும் மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 4 ம் பிரதிவாதி இறந்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

(ii) இந்நிலையில் கடந்த 05.10.2018 ம் தேதியில் இந்த எதிர்மனுதாரர்கள் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்து, அதில் 4 ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு 40 நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னிட்டு மனுதாரரால் கடந்த 12.09.2019 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கு நிலுவையில் உள்ள நிலையிலேயே 4 ம் பிரதிவாதி இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, 4 ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும்போதே தான் வழக்கு தாக்கல் செய்துவிட்டதாக தெரிவித்துள்ளார். அதேபோல் 1 ம் எதிர்மனுதாரர் கடந்த 06.11.2021 ம் தேதியில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலும் 4 ம் பிரதிவாதி இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு 40 நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி சங்கதி குறித்து தற்போதும் வழக்கு விசாரணையில் முடிவுற்ற பிறகு, மனுதாரர் தரப்பில் திருத்தங்கள் மேற்கொள்வது மனுதாரர் தரப்பு வாதுரை மற்றும் சாட்சியத்திற்கே முரணான ஒன்றாகும். அதேபோல் இவ்வழக்கானது வாதத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் பரிகாரம் மற்றும் சொத்துவிவரங்களில் திருத்தங்கள் கோருவது வழக்கின் தன்மையையே மாற்றிவிடும் என்பதோடு வழக்கை முடிவு செய்வதில் குழப்பத்தை ஏற்படுத்தும். இவ்வழக்கில் ஏற்கனவே சொத்துவிவரம் காண்பிக்கப்பட்டு, முழு விசாரணை முடிவுற்ற நிலையில், புதிதாக சொத்துவிவரத்தில் திருத்தம் மேற்கொள்வது வழக்கின் போக்கை மாற்றிவிடும்

என்பதாலும், கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்ட பின்பு வாதுரைகளை திருத்த இயலாது என்பதாலும், மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3, 7, 8 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதியால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகப்பிரிவினை, சுவாதீனப்பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு புதிதாக எழுவினாக்கள் வனைந்த பிறகு விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட சூழ்நிலைகளில் தற்போது உத்தேச திருத்தப்பாடுகளை மேற்கொள்ள வேண்டி மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது என்றும், இம்மனுவில் கோரப்பட்ட திருத்தங்கள் ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட வழக்கை எந்த விதத்திலும் திருத்துவதாகவோ, வழக்குரையின் அடிப்படையை எந்த விதத்திலும் மாற்றுவதாகவோ, சிதைப்பதாகவோ, புதிதான சங்கதிகளை புகுத்துவதாகவோ அமையாது என்றும், உண்மையில் நடந்த சம்பவங்களை விளக்கவும், வழக்குரையில் பரிகாரங்களுக்குரிய சரியான சொத்துவிவரத்தை சேர்க்கவும் வேண்டி தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) 1 முதல் 3, 7, 8 எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதித்தால் மேற்படி வழக்கின் அடிப்படையும், வழக்குமூலமும் மாற்றப்பட்டுவிடும் என்றும், 4ம் பிரதிவாதி குறித்தான திருத்தப்பாடு இத்தகைய சூழ்நிலையில் எவ்விதத்திலும்

அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், 4ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்ய சுமார் 40 நாட்களுக்கு முன்பே இறந்துவிட்ட நிலையில், கடந்த 01.11.2016ம் தேதியில் மனுதாரரால் இ.ம.எண்.977/2016 என்ற திருத்தப்பாடு கோரும் மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 4ம் பிரதிவாதி இறந்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார் என்றும், மேற்படி திருத்தப்பட்ட வழக்குரை சங்கதியை மறுத்து எதிர்மனுதாரர்களால் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் மனுதாரரின் முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் 4ம் பிரதிவாதி இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார் என்றும், தனது குறுக்கு விசாரணையில் 4ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும்போதே தான் வழக்கு தாக்கல் செய்துவிட்டதாக தெரிவித்துள்ளார் என்றும், மேற்படி சங்கதிகளை மறுத்து 1ம் எதிர்மனுதாரர் தன் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலும் 4ம் பிரதிவாதி இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு 40 நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார் என்றும், அதனால் மேற்படி சங்கதி குறித்து தற்போதும் வழக்கு விசாரணை முடிவுற்று, வழக்கானது வாதத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக திருத்தங்கள் மேற்கொள்வது வழக்கில் குழப்பத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) மேலும் இவ்வழக்கானது வாதத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் பரிகாரம் மற்றும் சொத்துவிவரங்களில் திருத்தங்கள் கோருவது வழக்கின் தன்மையையே மாற்றிவிடும் என்றும், இவ்வழக்கில் ஏற்கனவே சொத்துவிவரம் காண்பிக்கப்பட்டு, முழு விசாரணை முடிவுற்ற நிலையில், புதிதாக சொத்துவிவரத்தில் திருத்தம் மேற்கொள்வது வழக்கின் போக்கை மாற்றிவிடும் என்பதாலும், கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்ட பின்பு வாதுரைகளை திருத்த இயலாது என்பதாலும், இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளது தெரியவருகிறது.

(v) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதியால் விளம்புகை, விளைவுறு நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகப்பிரிவினை,

சுவாதீனப்பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை முடிவுற்று, பின் மீண்டும் புதிதாக கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டு, தற்போது இறுதி வாதத்திற்காக நாளிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையிலும், கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் மதிப்புமிக்க வாதங்களை கவனத்தில் கொள்கையிலும், தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது, தற்போது மனுதாரர் மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் திருத்தப்பாடுகளால் வழக்கின் அடிப்படைத்தன்மையும் வழக்குமூலமும் மாற்றப்படுமா? என்பதும், இவ்வழக்கினை தகுதிப்பாடுகளின் அடிப்படையில் தரப்பினரிடையே இறுதியாக தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்குமா? என்பதுமே ஆகும்.

(vi) இம்மனுவில் எதிர்மனுதாரர்களது பிரதான எதிர்வாதமானது இவ்வழக்கு கடந்த 23.11.2012 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 40 நாட்களுக்கு முன்னரே அதாவது 14.10.2012 ம் தேதியிலேயே 4 ம் பிரதிவாதியான அம்மாசி இறந்துவிட்ட நிலையில், மனுதாரரால் இ.ம.எண்.977/2016 ன் படி 4 ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் இறந்துவிட்டதாக கூறி வழக்குரை தவறாக திருத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி தவறை குறிப்பிட்டு எதிர்மனுதாரர்களால் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்றுள்ள நிலையில், தற்போது மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் 4 ம் பிரதிவாதி இறந்துவிட்டதாக கூறி வழக்குரையை திருத்துவது இவ்வழக்கின் தன்மையையும், வழக்குமூலத்தையும் மாற்றிவிடும் என்பதே ஆகும். வழக்கு ஆவணங்களின் படி மனுதாரரால் இறந்த 4 ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை வழக்கில் சேர்த்து வழக்குரையை திருத்த கோரி உ.வி.மு.ச. கட்டளை 6 விதி 17 ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனு எண்ணானது "877/2016" ஆகும். ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையில் மேற்படி இடைநிலை மனு எண் தவறுதலாக "977/2016" என கூறப்பட்டுள்ளது.

(vii) மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காண இவ்வழக்கில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது.

இவ்வழக்கானது வாதியால் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டுமே பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், 4, 5 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தேவையான தரப்பினர்கள் என்ற அடிப்படையில் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளதும், மேற்படி 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. அவ்வாறு 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கில் எவ்வித வழக்குமூலமும் காண்பிக்கப்படாத நிலையில் 4ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் உள்ள போது இறந்துவிட்டதாக கூறி வழக்குரையில் வாதியால் மேற்கொள்ளப்பட்ட முந்தைய திருத்தப்பாடானது இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி தொடர்பாக எவ்வித புதிய வழக்குமூலத்தையோ அல்லது வழக்கு மூலத் தொடர்ச்சியையோ ஏற்படுத்தவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) அவ்வாறு அசல் வழக்கில் 4ம் பிரதிவாதிக்கு எதிராக அடிப்படை வழக்குமூலமே காண்பிக்கப்படாத நிலையில், மேற்படி 4ம் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரப்படாத நிலையிலும், மேற்படி 4ம் பிரதிவாதி இவ்வழக்கை பொறுத்து ஒரு சம்பிரதாய தரப்பினர் என்ற நிலையிலும், 4ம் பிரதிவாதியின் இறப்பு குறித்து வழக்குரையில் வாதியால் மேற்கொள்ளப்படும் திருத்தப்பாடுகளால் இவ்வழக்கின் தன்மையும் வழக்குமூலமும் மாறிவிடும் என எதிர்மனுதாரர்கள் முன்வைக்கும் வாதம் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேபோல் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் மற்றொரு சங்கதி யாதெனில், அவ்வாறு மனுதாரரால் இ.ம.எண்.877/2016 ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பாடுகள் தவறானது என எதிர்மனுதாரர்கள் கூறும் நிலையில் மேற்படி திருத்தப்பாட்டிற்கு எதிராக எதிர்மனுதாரர்களால் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதே ஆகும்.

(ix) அடுத்ததாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கும் வாதம் என்னவெனில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே 4ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில் இறந்த நபருக்கு எதிராக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதாகும். மேற்படி வாதத்தை கருத்தில் கொள்கையில், ***“AIR***

***1993 SC 2324, Karuppuswamy & others vs. C.Ramamurthy”*** என்ற வழக்கில் மாண்பமை உச்சநீதிமன்றத்தால்,

> “5... While invoking the beneficient proviso to sub-secion(1) of Section 21 of the Act an averment that a mistake was made in good faith by impleading a dead defendant in the suit should be made and the court must on proof be satisfied that the motion to include the right defendant by substitution or addition was just and proper, the mistake having occurred in good faith. The court’s satisfaction alone breaths life in the suit.
>
> 6. It is noteworthy that the trial court did not attribute any neglect or contumacy to the conduct of the plaintiff-respondent. It was rather observed that the plaintiff could have know the date of the death of the first defendant only by the counter filed to IA.265/75. Normally, if he had known about the date of death of the defendant, he would have filed the suit in the first instance against his heirs and legal representatives. The trial court has also opined that the plaintiff was ignorant as to such death and that is why he filed IA.265/75 under order 22 rule 4 of CPC. The High Court too has recorded a findin gthat there was nothing to show that the plaintiff was aware of the first defendant and yet knowing well about it, he would persist in filing the suit against a dead person. In conclusion, the learned Single Judge action it clearly showed that he had acted in good faith. Thus the High Court made out a case for invoking the proviso to sub-section(1) of section 21 of the Act in favour of the plaintiff-respondent. Sequally, the High Court found no difficult in allowing IA.785/75 permitting change of the provision whereunder IA.265/75 was filed and in allowing IA.265/75 ordering the suit against the heirs and legal representatives of defendant No.1 to be dating bak to 14.11.74, the date on which the plaint was originally presented...”

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(x) மேற்கண்ட சட்டநிலைப்பாட்டை தற்போது இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளுடன் பொருத்தி ஆராய்கையில், இவ்வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராவதற்காக வைக்கப்பட்டிருந்த முதல் வழக்கேற்பு நாளான 23.12.2012 ம் தேதியில் 4 ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்ற குறிப்புடன் அழைப்பாணை திருப்பப்பட்டு, 4 ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, மேற்படி இறந்த 4 ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை மனுதாரர் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து நடவடிக்கை எடுக்க தவறியதால் மேற்படி 4 ம் பிரதிவாதிக்கு எதிரான வழக்கு கடந்த 12.07.2013 ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

(xi) பின்னிட்டு இவ்வழக்கில் கடந்த 07.02.2014 ம் தேதியில் எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கு விசாரணைக்கு நாளிடப்பட்டிருந்த நிலையில் தான் மீண்டும்

மேற்படி இறந்த 4ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரி இ.ம.எண்கள்.497/2015 முதல் 499/2015 வரையிலான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, அவை அனுமதிக்கப்பட்டதன் பேரில் கடந்த 01.11.2016ம் தேதியில் மேற்படி அனுமதிக்கப்பட்ட இடைநிலை மனுக்களை அனுசரித்து வழக்குரையில் இறந்த 4ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்த்து வழக்குரையை திருத்த கோரி மனுதாரரால் உ.வி.மு.ச. கட்டளை 6 விதி 17ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு இ.ம.எண்.877/2016 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு, கடந்த 13.03.2017ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(xii) மேற்படி இ.ம.எண்.877/2016ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலேயே இந்நீதிமன்றத்தால், ***"... ஆனால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 14.10.2012ல் இறந்துபோன 4ம் பிரதிவாதியை சேர்த்து 23.11.2012ல் வழக்கு தாக்கல் செய்துவிட்டு, வழக்கு நிலுவையில் உள்ள போது 4ம் பிரதிவாதி இறந்ததாக மனுதாரர் பொய்யாக கூறியுள்ளதாக 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கானது பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கிற்கு முன்பே 4ம் பிரதிவாதி இறந்திருந்தாலும், அவரது இறப்பு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரியவரும் பட்சத்தில் 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 4ம் பிரதிவாதி இறந்திருந்தாலும், அது சம்மந்தமாக பாகப்பிரிவினை வழக்கை நடவடிக்கை எடுப்பதை ஆட்சேபனை செய்ய இயலாது எனவும், மேற்படி நடவடிக்கை எடுத்திருப்பதில் எந்த தவறும் இல்லை எனவும் இந்நீதிமன்றம் காண்கிறது..."*** என தீர்மானிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(xiii) அவ்வாறு வழக்கு நிலுவையில் உள்ள போது 4ம் பிரதிவாதி கடந்த 14.10.2012ம் தேதியில் இறந்துவிட்டதாக கூறி, வழக்குரையை திருத்த கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.877/2016 என்ற மனுவில் இவ்வழக்கு தாக்கல்

செய்யப்படுவதற்கு முன்பே கடந்த 14.10.2012ம் தேதியில் 4ம் பிரதிவாதி இறந்தது குறித்து மனுதாரருக்கு தெரியாமல், நன்னம்பிக்கையின் அடிப்படையில் தவறுதலாக மனுதாரர் மேற்படி 4ம் பிரதிவாதியையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளார் என இந்நீதிமன்றம் உளநிறைவுற்றதன் பேரில் மேற்படி மனுவை தகுதிப்பாடுகளின் அடிப்படையில் அனுமதித்துள்ளதும், மேற்படி இ.ம.எண்.877/2016ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக எதிர்மனுதாரர்கள் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் தெரியவருகிறது.

(xiv) மேலும் மேற்படி திருத்தப்பாடுகளின் அடிப்படையில் இறந்த 4ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுதாரர்களான 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு, வழக்கு விசாரணையே முடிவடைந்த நிலையில், மேற்படி 4ம் பிரதிவாதி இவ்வழக்கு நிலுவையில் உள்ளபோது இறந்ததாக மனுதாரரால் வழக்குரையில் முன்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பாடுகளை தற்போது மீண்டும் திருத்தி 4ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டதாக குறிப்பிடுவதற்கும், தற்போது இவ்வழக்கினை தகுதிப்பாடுகளின் அடிப்படையில் தீர்மானிப்பதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xv) இருப்பினும் மேற்படி திருத்தப்பாடுகள் தொடர்பாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையிலும், இருதரப்பிலும் வாதுரைகளை அனுசரித்து, சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், அது தொடர்பாக ஒரு கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ள நிலையிலும், தற்போது இந்நிலையில் மீண்டும் மேற்படி 4ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இறந்துவிட்டதாக வழக்குரையில் திருத்தங்கள் செய்வதால் மேற்படி எதிர்மனுதாரர்கள் முன்வைக்கும் எதிர்வாதத்தின் ஏற்புடைமை குறித்து அறுதியாக தீர்மானிக்க இயலாத சூழல் ஏற்படும் என்பதாலும், மேற்படி எதிர்வாதம் குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதாகிவிடும் என்பதாலும், மேற்படி 4ம் பிரதிவாதி தொடர்பாக மனுதாரர் கோரும் திருத்தப்பாடுகள் இவ்வழக்கை தீர்மானிக்க அவசியமற்றவை எனவும், இவ்வழக்கிலுள்ள பிரதான

பிரச்சனைக்கு எவ்விதத்திலும் தீர்வு காண உதவக்கூடியவை அல்ல எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(xvi) அடுத்ததாக, மனுதாரரால் கூடுதல் சொத்துவிவரங்களை இவ்வழக்கில் சேர்த்து வழக்குரையை திருத்த அனுமதிக்க கோரியுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மேற்படி திருத்தப்பாட்டு விவரங்களை பரிசீலனை செய்கையில், தற்போது திருத்தப்பாட்டு மனுவில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள "சேலம் மேற்கு ரிடி, தாரமங்கலம் சப்ரிடி, மேட்டுர் வட்டம், தாசக்காபட்டி கிராமம், ச.எண்.28/3 பு.ஹெக்.0.81.5 (2.01) தீர்வை ரூ.3.14 இதில் இந்த கிரயத்துக்கு சம்மந்தப்பட்ட புஞ்சை ஏக்கர் 0.65 சென்ட் விவசாய நிலம்" என்ற அதே சொத்துவிவரம் மனுதாரரால் ஏற்கனவே இவ்வழக்கில் சொத்துவிவரமாக காண்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி அதே சொத்துவிவரத்தை மீண்டும் வழக்குரையில் சேர்த்து வழக்குரையை திருத்துவதால் எவ்வித பயனும் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xvii) எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் வழக்குரையில் திருத்தப்பாடுகள் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தற்போது இவ்வழக்கில் தரப்பினரிடையே உள்ள பிரச்சனை குறித்து தீர்வு காண்பதற்கு உதவும் வகையில் இல்லை என தீர்மானித்து மேற்படி மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம்

ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.10.23 17:45:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.10.23 17:45:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.